.53

Approved by the Text Book Committee (Vide Fort St. George Gazette)
Part 1-B. Page 203 dated 19th May 1925.

வாலி சரிதை.

"THE STORY OF VALI."

தமிழ்ப்பண்டிதர்
இ. ஸ்ரீ. கோவிந்தய்யங்கார் அவர்கள்
இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR
14 AUG 1926
MADRAS

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,
மதறாஸ் & மதுரை.

[...right] [Price As. 2½.

1926

TS
031,6
N26
177787

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

உ

வாலி சரிதை.

'THE STORY OF VALI'

OFFICE OF THE REGISTRAR
14 AUG 1926
MADRAS

3/96
874 8/10

தமிழ்ப்பண்டிதர்
இ. ஸ்ரீ: கோவிந்தய்யங்கார்
இயற்றியது.

(இரண்டாம்பதிப்பு.)

சென்னை
பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
அவர்களால்
பிரசுரிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் செய்தது] [விலை அணா 2½

-600 008.
177787

PRINTED AT THE
MEENAKSHI VILAS PRESS MADURA.
1926.

OFFICE OF THE REGISTRAR
14 AUG 1926
MADRAS

முகவுரை.

வாலி சரிதை வழுவறச் செப்பினன்
பாவியர் பண்புடன் பற்றவே-காவியனும்
வண்ண நடையில் வழங்கா திருத்தலைக்
கண்ணனிகர் கோவிந்தன் கண்டு.

மதுரைமாநகரைச்சேர்ந்த உசிலம்பட்டியின்கண் உள்ள உயர்தர போர்டு ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டி தரும், ஸ்கூலில் கற்கும் மாணவராகிய கள்ளர்களையும் அவர்கள் மூலம் மற்றும் கள்ளர்களையும் நல்வழிப்படுத் திக்கொண்டு வருபவரும், சதா கண்ணனிடம் ஈடு பட்டவரும், வயதில் சிறுவருமான ஸ்ரீகோவிந்த ஐயங்கார் என்னும் நாமம்பூண்ட ஸ்ரீமான், தமிழ்நாட்டுச் சிறுவர்களுக்குத் தகுந்த நிதியைத்தர தாபங்கொண்டு தகைமைவாய்ந்த வாலி சரிதையையும், தான் முன் வழங்கியுள்ள நூல்களுக்கு உதவியாய்ச் செய்துள்ளார். இவ்வரிய நூல் மாணவருக்கும் மற்றும் பக்தருக்கும் பயன் படுவதோடு புஸ்தகசாலை ஒவ்வொன்றிலும் சிறப்புற்றோங்கும் என்பது திண்ணம்.

(Sd.) V. S. HARIHARA AYYAR,

Usilampatti, 10-11-23. — *Deputy Inspector of Schools, Usilampatti Range.*

முன்னுரை.

பெரும்பாலும் இராமாயணத்தில் சிற்சில பகுதிகள் S. S. L. C. பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கப்பட்டு வருவதை யானறிவேன். அவற்றுள் வாலிவதைப்படலமுமொன்று. அவ்வகுப்பிற்குச் செல்லு முன்னமே கீழ்வகுப்புகளில் மாணவர்கள் அவற்றை வசனநடையில் படித்தறிதல் பின் பெரும் உதவியாக நிற்கும் என்று கருதி, இராமாயணத்தின் முக்கியமான சிற்சில பாகங்களை இனிய தமிழ் நடையில் எழுதல் நலம் என என் புத்தியிற்பட்டு அவ்வாறு செய்தும் வருகின்றேன். அவற்றுள் இஃதும் ஒன்று. மிடில் ஸ்கூல் மாணவர்களும் தெள்ளிதிற்றெரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையிலேயே இதனையியற்றியுள்ளேன். வியாசம் எழுதுவதற்கு முக்கியாம்ஸமாகிய பத்தியிலக்கணமும் (Paragraph system) தழுவியிருக்கிறேன். இடையிடையே எடுத்தாளப்பட்ட இனிய கம்பராமாயணச் செய்யுட்களுக்கு குறிப்புரை அங்கங்கேயே காட்டியிருக்கிறேன்.

இதனையும் எனது பிறநூல்களையும் ஆதரித்து வரும்படி அதிகாரிகளை வேண்டிக்கொள்ளுகிறேன். நான் இயற்றிய சிற்சில புத்தகங்களை தத்தம் கலாசாலைகளில் பாடப்புத்தகமாய் வைத்தாதரித்துவரும் மதுரைஜில்லாபோர்டு செகன்டரி பாடசாலை தலைமையாசிரியர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தை இதன்வாயிலாயறிவிக்கின்றேன்.

இங்ஙனம்,

நூலாசிரியன்.

OFFICIAL ... 14 AUG 1926 MADRAS

வாலி சரிதை.

அத்தியாயம் 1.

உலகம் யாவற்றிற்கும் ஒங்கொருதலைவனாய் விளங்கும் சிவபிரானது பாரியையான உமாதேவி வழக்கம்போல் ஓர் சோலையில் விளையாடிக்கொண்டிருந்தாள். அச்சமயம் அச்சோலையில் ஆடவர்களணுகினால் தீங்குநேரும் என்பதைக் கருதிய அவள், இச்சோலையின் கண்ணணுகுவோர் ஆடவராயின் பெண்டிராகுக என்று ஓர் சாபமளித்திருந்தாள்.

இச்சமயத்தில் ருக்ஷரஜஸ் என்ற வானர ராஜன் ஒருவன் இச்சாபத்தை யறியானாய் அச்சோலையினுட் புகுந்து மலைமகளது சாபவன்மையால் பெண்ணாகவே மாறினான்.

சிறிது காலத்திற்கெல்லாம் பெண்ரூப மடைந்த இக்குரங்கினத் தலைவனது வாலின் அழகைக் கண்ணுற்ற தேவேந்திரன் மிக்க மோஹம்கொள்ள சிறிது நேரத்திற்கெல்லாம் ருக்ஷரஜஸினிடம் யாவருக்கும் மேம்பட்ட வலிமையையுடைய வாலி என்பவனுதித்தான்.

அஃதேபோல் ருக்ஷரஜஸ்மீது காதல்கொண்ட சூரியனுக்கு சுக்ரீவன் என்னும் வலிமை தங்கிய குமாரன் உதித்தான்.

இருவரும் பிறந்தவுடனேயே பெரு வலியுடையோராகக் காணப்பட்டமையின் கிஷ்கிந்தை வானரர்களனைவரும் தமக்கு பெருநிதி கிடைத்ததுபோலெண்ணி அளவிலா மகிழ்ச்சியடைந்தனர்.

சின்னாட்களில் ருக்ஷரஜஸ் இறந்துவிடவே, மூத்தகுமாரனாய வாலி இறைமை பூண்டான். இளையோனாய சுக்ரீவன் இளவரசனாக வாழ்ந்து வந்தான்.

வாலி ராஜ்யத்தை நீதியாய்ப் பரிபாலித்து வந்ததுடன் அப்பொழுதிருந்த வீரர்களிலெல்லாம் முதன்மைபெற்றும் விளங்கினன். அவ்வாறு அவன் வாழ்ந்து வருகையில் 'துந்துபி' என்னும் அரக்கன் ஒருவன் மிக்க வலிமையுடையோனாய் இவ்வுலகில் தன்னை வெல்வோர் ஒருவரும் இலர் என மதித்து சகல ஜகத்காரணனான மகாவிஷ்ணுவினிடம் சென்று தன்னுடன்போர் செய்யுமாறு அறைகூவினான். இவனது மிக்க வல்லமையை அறிநத மகாவிஷ்ணு அவனைநோக்கி ஏ துந்துபி! உன்னுடன் எதிர்க்கத்தக்கவன் யானல்லன். விஷமுண்டு கறைகெழு கழுததினனாய பரமசிவனே தகுந்தவன் எனக்கூற, துந்துபி சிவபெருமான் வாழ்ந்து வந்த கைலையை நோக்கிச் சென்றான், எருமை வடிவமாய் அங்குசென்ற அத்

துந்துபி வலியுடைய தன் இரு கொம்புகளாலும் அக் கைலயங்கிரியைத் தூக்க, சிவபெருமான் அவன் முன் வந்து, ஏ பெருவலி அவுண! உன்னுடன் போர் செய்பவர்கள் யாங்களல்லேம். பூவுலகத்தில் சிறந்து விளங்கும் கிஷ்கிந்தையில் செங்கோல் செலுத்திவரும் வாலியென்னும் வானரராஜனே உன்னுடன் போர் செய்தற்குற்றவன், எனவே அங்கு ஏகு எனக்கூறி மறைந்தனர். துந்துபி கிஷ்கிந்தையை நோக்கிப் புறப்பட்டான்.

அங்கு வந்தடைந்த அவுணன் வாலியினது கோட்டை வாயிற்புறம் நின்று பலமாய்க் கர்ச்சித்து வாலியைச் சண்டைக்கழைக்க, அவனும் அங்கு வந்தடைந்தான். அடைதலும் இருவர்க்கும் போர் தொடங்கிற்று. இருவரும் தக்க வீரர்களாக இருந்தமைபற்றி வெற்றி தோல்வி இன்றியே அநேக நாட்கள் போர்செய்தார்கள். இறுதியில் வாலி வாகை சூடினன். துந்துபி வாலியாற் கொல்லப்பெற்றான்.

துந்துபி உயிர்நீத்ததும், வாலி அவனது உடலையெடுத்து சுழற்றி மிக விரைவாய் ஆகாயத்தில் எறிந்தான். அவ்வாறு அவனலெறியப்பட்ட உடல் இருஷியமூக பர்வதத்தின் கண்ணே அருந்தவம் செய்த மதங்க முனிவர் ஆச்ரமத்தில் விழுந்தது.

அவ்வுடல் தம்ஆச்சிரமத்தில் விழுந்ததையறிந்த முனிவர் மிகக் கோபங்கொண்டவராய் "இவ்வாறு என்னை அவமதித்தவன் இம்மலையை அணுகுவானே

யாலுல் உயிர் துறக்கட்டும். அவனுக்குதவிசெய்வோர் ஈண்டடையின் அவர் உருவும் கல்லாய்விடுக" என்று சபித்தார்.

இவ்வாறு முனிவர் சாபமிட்டதையறிந்த வாலி தான் செய்த செய்கைக்கு மிக வருந்தி முனிவரை யடைந்து மன்னிக்கும்படி வேண்டினன். ஆனால் முனிவர் அதற்கு உடன்படவில்லை. அதுமுதல் வாலியேனும் அவனது நண்பரேனும் அப்பர்வதத்தை அணுகுவது இல்லை.

அத்தியாயம் 2.

இறந்த துந்துபிக்கு ஓர் சகோதரனிருந்தான். அவன் மாயாவி என்னும் பெயரினன். மிகுந்த வலியுடையவன். இவன், தன் சகோதரனாய துந்துபி இறந்தானென்பதை யறிந்ததும் மிக்க கோபங்கொண்டு வாலியைக் கொன்றுவிட வேண்டுமென்றெண்ணி அவனது கோட்டைவாயிற்புறத்தே வந்து கர்ஜித்தான். இவனது பயங்கரமான கர்ஜனையைக் கேட்ட வாலியும் சிறிது மஞ்சாமல் அவனிருந்த இடத்தை நோக்கி வந்தான்.

மாய அவுணனுடன் தன் தமையனான வாலி போர் செய்யச் செல்வதைக் கண்ட சுக்ரீவன் மிக விரைந்து சென்று அவனது பாதங்களில் விழுந்து அண்ணா! மிக்க வலிபுடையோனாய துந்துபியையும்

வெட்டிக்கொன்ற வீரராகிய தங்கள் முன் இவ்வற்பன் எம்மட்டு. அவனையும் ஓர் வீரனாக மதித்து தாங்கள் போர்செய்யச் செல்வதில் எனக்குச் சிறிதும் சம்மதமில்லையென்று கூறினான்.

மேற்கூறியவாறு சொல்லிய சுக்ரீவனைப் பார்த்து வாலி தம்பி! நீ கூறியதுண்மையே ஆயினும் அவன் வலுவில் வந்து போருக்கழைத்திருக்க நான் செல்லாதிருப்பேனேல் என்னை அவனும் அவனினத்தார்களும் மற்றையோரும் இகழ்ந்துரைப்பர்.

என்னை எதிரிற் கண்டானேயானால், மிகுதியான பயத்துடன் அக்கோழை ஓடிவிடுவான். அவ்வாறு ஓடாமல் என்னுடன் உடற்றத்துணிவனேயானால் ஒரு நொடியில் அவனுயிரை அந்தக னுலகத்திற் கனுப்புவது திண்ணம். இதில் நீ யாதொரு தடையும் கூறலாகாது என்று சொல்லவே சுக்ரீவனும் யாதொன்றும் பதிற் பேசாது நின்றான்.

உடனே வாலி மிகுந்த கோபாவேசங்கொண்டு தன் எதிரியாய் அவுணனைக் கொல்லும் நோக்கத்துடன் மிகவிரைவாய்ச் சென்றான். சுக்ரீவனும் அவனைத் தொடர்ந்து சென்றான்.

வாலி கோட்டை மதிற்புறத்தை யடையவே அவனது கம்பீரமான உருவத்தைக் கண்ணுற்று மாயாவி என்போன் ஓட ஆரம்பித்தான்.

மாயாவி தோற்றோடுவது தெரிந்தும், வாலிதான் அவன்மீது கொண்ட கோபம் தணியப்பெறாது அவனைத் தொடர்ந்து சென்றான்.

தான் எங்கு சென்று பதுங்கினாலும் வாலி விடாது தொடர்ந்து வருவதையறிந்த மாயாவி இளைத் தவனாய் மலை யடிவாரத்தி லிருந்த ஓர் குகையையே கதி யென்று நினைத்து அதற்குள் பதுங்கச்சென்றான்.

இவ்வாறு மாயாவி குகைக்குட் புகுந்ததை யறிந்த வாலி தன்னைத் தொடர்ந்து வந்தவனாயுள்ள தன் தம்பி சுக்ரீவனைப் பார்த்து, தம்பி! சுக்ரீவ! நான் இம்மாய அவுணனைக்கொன்றாலொழிய நங்நக ரத்திற்குத் திரும்புவதில்லை அவ்வாறு நான் அவ னைக் கொல்லத்தவறின் ஆண்டே இறப்பது திண்ணம். எனவே, நான் திரும்பிவரும்வரை நீ இக்குகை வாயி லிலேயே இருக்கவேண்டும் எக்காரணத்தாலும் இதனைவிட்டு அகலலாகாது என்று சொன்னான்.

சுக்ரீவன் பலவாற்றால் அவ்வவுணனைத் தொடர வேண்டாமென்று கூறியும் வாலியின் கோபம் தணிந்தபாடில்லை. ஆகையால் சுக்ரீவன் இறுதியில் அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டான். வாலியும் குகைக்குள் நுழைந்தான்

அத்தியாயம் 3

வாலி இவ்வாறு கூறிச்சென்று அநேக மாதங்க ளாயின. அவன் திரும்பிவந்திலன் ஆனதுபற்றி சுக் ரீவன் மனத்தில் அநேக சந்தேகங்கள் உண்டாயின.

மாயாவி என்னும் அவுணனும் மிகுந்த வலிமை யுடையோன் ஆகையின் வாலி அவனால் கொல்லப்பட்டிருக்கலாமென்று நினைத்தான். சுக்ரீவன் மனத்திலெழுந்த எண்ணத்திற் கியைந்தவாறு சில நாட்களுக்கெல்லாம் பெரிய ரத்தப் பிரவாகம் அக்குகையின் வழியே வந்து வெளியிற் பெருகிற்று அதன் பிற்பாடும் வாலி திரும்பவில்லை சுக்கிரீவன் தன் தமையன் இறந்தான் என்று தீர்மானித்து அப்பிலத்தின் வாயிலிலேயே நின்று பலவாறு பன்னிக் கதறிக் கொண்டிருந்தான். இவ்வாறு இவன் அழுதற் குரலைக் கேட்ட, அக்கிஷ்கிந்தை நகரமாந்தரனைவரும் ஓடோடி வந்து 'என்னை? சுக்ரீவா! நீயும்கூட ஏன் இவ்வாறு அழுகின்றாய்? என்று வினவ சுக்ரீவனும் தன் மனத்திற்றோன்றியதை உள்ளவாறு அவர்கட்குரைத்தான். அவர்களும் தம் அரசனான வாலி, இறந்தான் என்றே நிச்சயித்து பலவாறு வருந்தி சுக்ரீவனையே தங்கட்கு இறைவனாக இருக்கும்படி வேண்டிக் கொண்டனர். அவ்வாறு அவர்கள் கூறுதலும் சுக்ரீவனுக்கு முகம் சிவந்தது. கண்களில் நெருப்புப் பொறி பறந்தன. மீசை படபடவென்று துடித்தது.

இவ்வாறு தோன்றிய பல கோபக்குறிகளுடன் சுக்கிரீவன் நகரமாந்தரை நோக்கி 'ஜனங்களே! நீங்கள் கூறியவார்த்தை என் மனத்திற்குச் சிறிதும் ஒப்பவில்லை. எனது உயிர்ச் சோதரனை கேவலம் ஓர் அவுணன் கொன்றிருக்க, அவனை உயிருடன் விடுத்து அரசு செய்வதா, எம்போன்ற வீரருக்கழகு?

"வானமாள வென் றெம்முனை வைத்தவன்
தானுமாளக் கிளையி னிறத் தடிந்(து)
யானுமாள்வேன் இருந்(து) அரசாள்கிலேன்
ஊனமான உரை பகர்ந்தீர்........."

என்று பற்பலவாறு பழித்துரைத்து, தன் தமையன் மாயாவியுடன் போர் செய்யச் சென்ற குகையின் வழியே தானும் போகலுற்றான்.

தங்கள் வார்த்தையை மறுத்து, சுக்ரீவன் குகையின் வழிச் செல்லுவதைக் கண்ட அந்த ஜனங்கள் வாலியைக் கொன்ற மாபாவி இவனையும் கொன்று விடுவான் என்று எண்ணம் கொண்டு, அவன் அக் குகையின் வழிச்செல்லாதபடி, பிடித்திழுத்து அரசனாகும்படி பலவாறு வேண்டிக் கொண்டும், சுக்கிரீவன் அதற்கிணங்கவில்லை. இறுதியில் அவர்கள், சுக்ரீவனைப் பார்த்து 'அரசே! வாலியோ இறந்துபட்டார். அவரது குமாரராய அங்கதரோ மிக்க இளைஞரா யிருக்கின்றார். அவருக்கு ஏற்ற வயது வரும் வரை இவ்வரசைக் காத்து வரவேண்டியது தம்முடைய கடமையாகும். அவ்வாறு தாங்கள் செய்யாது ஒழியின் அரசற்று விளங்கும் இக் கிஷ்கிந்தையை பகைவர்கள் இலேசில் விடார்கள். அநேக காலமாக மேன்மையுற் றிருந்த இவ்வரசு இனித் தாழ்மையடைவதும் நிச்சயம். தாங்கள் குகைக்குட் செல்லுவீர்களேயானால் தங்கள் தமையனைக் கொன்ற அவ்வவுணன் தங்களையும் கொல்வான் என்பது நிச்சயம். அவ்வாறு தாங்கள்

இறந்த பின் நாங்கள் எவ்வாறு உயிர் வாழ்வோம்!' என்று பற்பல இரக்கமொழிகள் பகர்ந்தனர். இவர்கள் கூறியயாவும் உண்மையெனவே சுக்கிரீவன் மனத்திற்பட்டதால் தன் அண்ணனை யிழந்த துயரம் ஓர்புறம் பெரிதும் வருத்தினும் ஒருவாறு தேறி அவ்வேண்டுகோட்கு சுக்கிரீவன் உடன்பட்டான்.

பின், வாலியின் உயிரைக்கவர்ந்தவனுய்க் கருதப்பட்ட மாயாவி திரும்பித் தமக்குத்துன்பமிழையா வண்ணம், வானரவீரரனைவரும் ஓர் பெரிய மலையைப் பிடுங்கி, அக்குகை வாயிலை யடைத்துவிட்டு நகரத்திற்குத் திரும்பினர்.

சுக்கிரீவனும் தன் தமையனுய வாலி காத்து வந்த அரசைத் தானும் முறையாகவே பாதுகாத்து வந்தான்.

அத்தியாயம் 4.

இனி மாயாவியுடன் போர்புரியச் சென்ற வாலியைப்பற்றி கவனிப்போம். மாயாவியென்னும் அவுணன் தன் பேருக்கியைந்தவாறே மிக்க மாயம் வல்லவனுயிருந்தான். அவன் நினைத்த உருவம் கொள்ளும் சக்தியுடையவனு யிருந்தமையின் வாலி அவன் இருந்த இடத்தைக் கண்டறியவே அநேக மாதங்கள் பிடித்தன. கடைசியில் அவனைக் கண்டதும் வாலி

மிக்க கோபாவேசத்துடன் அவனுடன் போர் செய்து அவனை வெட்டி வீழ்த்தினன். அவுணனது குருதி வெள்ளத்தையே சுக்கிரீவன் முதலியோர் வாலி உடலின் இரத்த வெள்ளம் எனக்கருதி வருந்தினர். நிற்க,

வாலி மாயாவியைக் கொன்று வீழ்த்திய பின் மிகுதியான மனமகிழ்வுகொண்டு தன் தம்பி சுக்கிரீவன் காவலாயிருந்த வாயிற்புறத்தைநோக்கி வந்தான். எங்கே பார்த்தாலும் இருட்டா யிருந்ததேயன்றி வாயிலை அவன் கண்டிலன். விரைவாக வந்தவன் வழி தடைபடவே எதிரில் இருந்தது யாது எனத் தடவிப் பார்த்தான். குகையின் வாயிலை ஒரு பெரிய மலை அடைத்துக்கொண் டிருப்பதைக் கண்டு அதைத் தன் வன்மையால் கீழே தள்ளி வாயிற்கு வந்தான்; வந்ததும் சுக்கிரீவனை அங்குகண்டிலன்.

மலையால் குகைவாயி லடைக்கப்பட் டிருந்ததையும் சுக்கிரீவன் அங்கு இல்லாததையும் பார்க்கவே வாலி மனதில் பல சந்தேகங்கள் எழுந்தன. உடனே வாலி மிகுதியான கோபங்கொண்டு கிஷ்கிந்தையை நோக்கி மிக விரைவாய் ஓடிவந்தான்; வந்தவன் தன் வெற்றிதோன்ற விரைவாய் கர்ஜித்துக் கொண்டு கிஷ்கிந்தையின் உட்புகுந்தான். இவன் செய்த பேரொலி அரண்மனையிலிருந்த சுக்கிரீவன் காதில் விழுந்தது. அது தன் தமையன் குரல்போன்றிருக்கவே சுக்கிரீவன் மகிழ்ச்சியடைந்து வெளி வந்து தன் அண்ணனைக் கண்களில் ஆனந்த பாஷ்பம்

பெருகக்கண்டு வணங்கி நின்றான். அவ்வாறு நின்ற இளையோனை வாலி தன் கண்களில் எரி எழ விளித்து, "அடா! நன்றிகெட்ட பாதகா! உன்னை இதுகாறும் என் சகோதரன் என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது தான் நீ, உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்பதை உணர்ந்தேன். மலை எடுத்தடைத்து விட்டால் நான் வரமுடியாதென் றெண்ணினையோ? நீ அத்தகைய எண்ணம் கொண்டவன் என்பதற்கு என் உத்திரவை மீறி இங்கு வந்து அரசு செய்வதினும் வேறோர் சான்றும் வேண்டுமோ? சீ! அற்பமே! தாய்பசி காண்போருக்கும், பசுமாடு அறுத்த பாதகர்க்கும், பிராமணரை இகழ்ந்த துரோகிகட்கும் தெய்வத்தை இகழ்ந்த துரோகிகட்கும் கூட அவர்களது பாவங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டு. நன்றி கொன்ற பாதகர்களுக்கு அப்பாவத்தை ஒழிக்கத் தக்க உபாயம் ஒன்றும் இல்லை என்பதை மறந்தனையோ? இப்பொழுதே என் முன் நில்லாமல் ஓடி விடு. இல்லையாயின் இதோ ஒரே அறையில் உன்னைக் கொன்றுவிடுவேன் என்று கூறிக்கையை ஓங்கினான்.

வாலி இறந்தான் என்று தான் எண்ணியது தவறு என்பதை அப்பொழுதுதான் சுக்கிரீவன் உணர்ந்தான். ஆயினும் வாலி தன்னை அவ்வாறு கோபித்துக்கொள்ளும்படி தான் செய்த குற்றம் இன்னதென்று அவனுக்குத் தெரியவில்லை. உடனே அவன் தன் தமையன் காலில் விழுந்து, "அண்ணா! உலகத்தார் தந்தைக்குப்பின் தமையன் என்பார்கள். எனக்

குத் தந்தையினும் சிறந்தவரே! நான் தங்கள் சொற்படியே, குகை வாயிலில் காத்துக்கொண்டிருந்தேன். நெடுநாளாயும் தாங்கள் திரும்பவில்லை. ஆகையால் தங்களுக்கு அவ்வவுணனால் ஏதேனும் தீங்கு நேர்ந்திருக்கலாம் என்று கருதி அவ்வவுணனை பழிக்குப் பழிவாங்கி என்னுயிரையும் போக்கிக் கொள்ளவேண்டும் என்ற விருப்பத்துடன் குகைக்குள் நுழையலானேன். அப்பொழுது நம் குலத்திற் பிறந்த பெரியோர்களனைவரும் தாங்கள் இறந்ததாகவே எண்ணி என்னையே அரசனாகும்படி வேண்டினர். நான் அதற்கிசையவில்லை. ஆயினும் அவர்கள் தங்கள் வல்லமையால் என்னையே இவ்விராச்சியத்திற்கு இறைவனாக்கினர். தாங்களே திரும்பிவந்து விட்டபடியால் யாதொரு தடையும் இன்றி இவ்வரசை ஏற்றுப் பரிபாலித்துவருக. நான் தங்கள் ஊழியருள் ஒருவனாகவே இருந்து, தாம் காலாலிட்ட வேலைகளைத் தலையாலே செய்து முடிக்கச் சித்தனா யிருக்கிறேன். நான் தாங்கள் இவ்வாறு கோபித்துக்கொள்ளும்படியான குற்றம் யாதும் செய்யவில்லை. அறியாமையால் சிறுபிழைகள் செய்திருப்பினும் பொருத்தருள்க" என்று கூறிக்கொண்டே அடியற்ற மரம்போல் வாலியின் காலில் விழுந்தான்.

இவ்விதமாக சுக்கிரீவன் பல வணக்கமொழிகள் கூறியும் வாலிக்குச் சிறிதும் இரக்கம் எழவில்லை. தன் காலில் விழுந்து கதறிய தம்பியைச் சிறிதும் கருணையின்றி காலால் உதைத்துத் தள்ளி மறுபடி

யும் கைபோங்கி அவனை அறையவந்தான். அப்பொழுது சுக்கிரீவன் அண்ணு! அண்ணு! வேறு எவரேனும் எனக்குத் துன்பம் செய்வாரேயாயின் நான் தங்களிடம் வந்து முறையிட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவன். அவ்விதமிருக்கத் தாங்களே என்மீது கொஞ்சமும் இரக்கமின்றி கொல்ல வருவீர்களேயாஞல் எனக்கு அபயம் கொடுத்துக் காப்பவர் யார்? இவ்வனுதையைக் காக்கவேண்டியது தேவரீரது பொருப்பே. நான் தங்களடைக்கலமே எல்லாப் புண்ணியங்களினும் அடைக்கலங்காத்தலே சிறந்தது என்று பெரியோர் கூறியுள்ளதைத் தாங்கள் அறிவீர்களே என்று கூறிக்கொண்டே கீழே விழுந்து வாலியின் கால்களைத் தன் இரு கண்ணீரால் கழுவினன். அவ்வாறு கூறிக் காலில் விழுந்தவனை வாலி மறுபடியும் எற்றித்தள்ளி, "ஏ சுக்கிரீவ! இன்னும் நீ என்ன கூறினுலும் உன்மீது எனக்குச் சிறிதும் கருணை பிறக்கமாட்டாது. நீ வீணில் பிதற்றுவதில் பயனில்லை. பெரும் வஞ்சகத்தொழிலைச் செய்ய உடன்பட்ட நீ, இப்பொழுது உன் உயிரைக் காத்துக்கொள்வதற்காக பலவார்த்தைகள் பிதற்றுகிருய் என்பதை நானறிவேன். இதோ எவ்விதமேனும் உன்னைக் கொன்றே தீருவேன். வீரனுயின் என்னுடன் போர் செய்ய எழுந்திரு" என்று கடுமையாகப்பேசினுன்.

இம்மொழிகள் தன் செவிகளிற் சேரவே சுக்ரீவன் இனி மன்ருடுவதிற் பயனில்லை யென்பதையறிந்

2

தான். உடனே தான் உயிர் பிழைப்பதே பெரிதெனக் கருதி அவ்விடத்தைவிட்டு ஓட ஆரம்பித்தான். வாலியும் ஓடிய சுக்கிரீவனைத் தொடர்ந்தான். தான் எந்த இடத்திற்குச் சென்றாலும் வாலி தொடர்ந்து வருவதையறிந்த சுக்கிரீவன் செய்வதொன்றும் தோன்றாமல் சற்றே திகைத்து நிற்கையில் 'கப்பலுடைந்து கடலிலாழ்பவனுக்கு ஓர் மரக்கலம் தென்பட்டதுபோல் சரேலென ஓர் எண்ணம் மனதில்பட்டது. அதாவது மதங்கமுனிவர் வாலிக்கு இட்டிருந்த சாபமே அது தன் நினைவிற்கு வருதலும் மிக விரைவாய் ஓடி மதங்கவனத்தைச் சார்ந்தான். முனிவரது சாபத்தால் வாலி அதை அணுகமுடியாதவனாய்த் திரும்பி கிஷ்கிந்தை வந்தடைந்தான்.

அத்தியாயம் 5

மதங்கவனம் சார்ந்த சுக்கிரீவன் அங்கு வாழ்ந்து வரும் தன்னைப்போன்ற வானரன் ஒருவனைக் கண்டான். உடனே அவனையணுகி அவனது வரலாற்றை வினவினன்.

அவ்வானரன் தன்பெயர் மாருதி என்றும் அஞ்சனா தேவிக்கும் வாயுபகவானுக்கும் உதித்த புதல்வன் என்றும் கூறினன். மேலும் அவன் தன் வரலாற்றை விரிவாய்க் கூறத்தொடங்கினன்.

"உயர்ந்தவரே! யான் என் தாய் கூறியவாறு என் வரலாற்றை உமக்குச் சொல்லுகிறேன்.

நான் பிறந்தவுடன் ஆகாயத்தில் விளங்கும் சூரியனை ஓர் செங்கனி என்று கருதி பறிப்பதற்காகச் சென்றேன். அக்காலை சூரியனைப் பற்றுதற்குரிய *இராகுவும் கேதுவும் இந்திரனிடம் சென்று என் வல்லமையை உரைத்தன. இந்திரன் மிகுதியும் கோபங்கொண்டு ஓடிவந்து தனது வஜ்ராயுதத்தால் என் கன்னத்திலடித்தான். உடனே நான்மூர்ச்சையுற்று விழுந்தேன். என்தந்தையாகிய வாயுபகவான் இந்திரன் செய்ததையறிந்து அவன்மீது மிகுதியும் கோபங்கொண்டார். பின் அவர் எல்லா உலகங்களிலும் தன் சஞ்சாரத்தை நிறுத்தவே சகல சராசரங்களும் வாட்டமடைந்தன. இதையறிந்த தேவர்கள் யாவரும் இந்திரன் செய்ததையும் வாயுபகவானது கோபத்தையும் பிரமதேவனுக்கு எடுத்துரைத்தனர். பின் யாவரும் ஒன்றுசேர்ந்து என் தந்தையிடம் சென்று இந்திரன் செய்தது தவறு என்றும் அவனை அதற்காக மன்னிக்கும்படியும் வேண்டினார்கள். என் தந்தையும் அவ்வாறே மன்னித்து பழையபடி எவ்வுலகங்களிலும் உலவலானர். அச்சமயத்தில் பிரமதேவன் என்னை உயிர்த்தெழச்செய்து எனக்கு மிக்க வலிமையும் அளித்தனர். இவற்றால் நான் மிகுதி

---

*இராகு-கரும்பாம்பு, கேது-செம்பாம்பு. இவை சூரியனது விரோதிகள்.

யும் கர்வமடைந்து முனிவர்களுடைய ஆச்சிரமங் கட் கேகி அங்கு அவர்களுக்கு பலவிதமான தொந் தரவுகள் செய்துவந்தேன். அதனால் அவர்கள் என் மீது கோபங்கொண்டு *உன்மத்தனாகும்படி சபித்த னர். அதுமுதல் நான் இங்குவந்து வாழ்ந்து வருகி றேன்.‡ எனக்கு உற்ற துணையாய் வந்த வானர சிரேஷ்டரே! தம்முடைய வரலாற்றை யறிய ஆவலு டன் இருக்கிறேன்" என்றுசொல்ல சுக்கிரீவனும் தன் வரலாற்றினை மிகவிரிவாய் எடுத்துரைத்தனன். அது முதல் இருவருக்கும் அளவிறந்த நட்புண்டா யது.

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்ற இலக்கணம் இவர்களிடம் குடிகொண்டிருந் தது.

இவ்வாறு இவர்கள் வாழ்ந்து வருகையில் அரக் கர்களை ஒழிப்பதற்கென்று தசரத புத்திரராய் அவ தார மெடுத்த இராமரும் இலக்குமணரும் சீதையைத் தேடிக் கொண்டு அவ்வழியே வந்தனர், அவர்கள் வருவதைக் கண்டதும் அங்கிருந்த அநுமானொழிந்த மற்றைய வானர வீரர் அனைவரும் வாலியால் சுக்கிரீ

---

* தன்பலம் தெரியாதவன்

‡இந்திரன் வஜ்ராயுதத்தால் சேதமடைந்த கன்னம் உடை யேன் ஆகையின் என்னை அனுமான்' என்றும் உலகினர் கூறுவர்.

வனைக் கொல்லுதற்கென்று ஏவப்பெற்ற வீரர்கள் என்று எண்ணி அவர்கள் கண்ணிற் படாதவாறு ஓடி ஒளிந்தனர்.

இவ்வாறு இவர்கள் யாவரும் ஓடி ஒளித்தற்குக் காரணம் யாதென அறிய விரும்பிய மாருதி இராம லக்ஷ்மணர்களிருக்கு மிடத்தை யடைந்தான். அறமே உருவெடுத்து வந்ததோ என்று சொல்லத் தகுந்த அவர்களைக் கண்டதும் மாருதி மனத்திலெழுந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. உடனே அவன் ஓர் பிரம்மசாரி வடிவம் தாங்கி அவர்களை யாரென அறிய விரும்பி அருகிற் சென்று வணங்கினன்.

அவ்வாறு தம்மை வணங்கிய அநுமானை ஸ்ரீராமர் தடுத்து, 'கேள்வி நூல் மறைவலாளா! என்னை நீ வணங்குவது கருமமன்று என்று கூற மாருதியும் தன் சுய ரூபத்தைக் காட்டி, 'ஸ்வாமி நான் ஒரு குரங்கேயாவேன். இம்மலையில் வாலிக்குப் பயந்து வாழ்ந்துவரும் சுக்கிரீவனது ஏவலாளன், என்றான். பின், இராமர் அவனை நோக்கி, "பெரியோய்! உன் வரலாற்றையும் சுக்கிரீவனது வரலாற்றையும் கூறுக" எனலும் மாருதி இராமரை வணங்கி,

"மஞ்செனத் திரண்டகோல மேனிய! மகளிர்க்கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத்(து) அலர்ந்தசெய்ய கண்ண! யான் காற்றின் வேந்தர்க்(கு)
அஞ்சனை வயிற்றில்வந்தேன்; நாமமும்' அநுமன்'........"

—கம்பர்.

என்று தன் வரலாற்றை விளங்கக் கூறி, வாலி சுக்கிரீ வருக்குப் பகை நேர்ந்ததையும் விளக்கி யுரைத்தான்.

மாருதி இவற்றைச் சொல்லி முடித்ததும், ஸ்ரீரா மர் இலக்குமணனை நோக்கி, தம்பி!

இல்லாத உலகத்(து) எங்கும் இங்(கு) இவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொல்? இச்சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளையவீர! விரிஞ்சனோ விடைவல்லானோ?'

—கம்பர்

என்று பலவாறு மாருதியைப் புகழ்ந்து பேசினார்.

அநுமான் பேசியதிலிருந்து, அவனிடம் முழு நம்பிக்கை கொண்ட இலக்குமணன் உடனே அவனைப் பார்த்து "பெரியோய்! எங்களது வரலாற்றைக் கூறுகிறேன்.

பார் முழுதும் பேர்படைத்த கோசல நாட்டரச ராய தசரதரை அறியாதவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். அச்சக்கிரவர்த்தியின் மூத்த குமாரரே யிவர். மாற்றான் தாயாகிய கைகேயின் விருப்பப்படி, தம்பி பரதனுக்கு நாட்டைக் கொடுத்து, பதினான்கு வருஷங்கள் காட்டிற் கழிக்கவந்தனர். நானும் அவரது பாரியையான சீதாதேவியாரும் உடன் வந்தோம். வந்தவர்கள் பஞ்சவடி தீரத்தில் தங்கியிருந்தோம். ஆண்டு தோற்றிய ஓர் மாயமானைக் கண்டு சீதாதேவி

யார் ஆகிய எனது அண்ணியார் காதல்கொள்ள, என் தமையனாரும் அவளது மொழியை மறுக்கமாட்டாது அதனைப் பற்றச் சென்றார். மாய மானுகையால் நெடுந் தூரம் அவரை யிழுத்துச் சென்றுவிட்டது. மானை உயிருடன் பிடிப்பது அரிது என்று எண்ணிய என் தமையனார் தமது பாணத்தை அதன்மீது ஏவினார். இராமபாணம் பாய்ந்ததும் அம்மாய மான் இராமரது குரலில் சீதாட்லக்ஷ்மணா!' என்றலறிக் கொண்டு கீழே விழுந்தது. இக்குரல் என்னண்ணியார் காதில் விழுந்ததும், அவர் ஸ்ரீராமருக்கே ஏதேனும் ஆபத்துநேர்ந்திருக்கலாம் என்று கருதி என்னை உதவிக்குப் போகும்படி கூறினார் அது இராமரது குரலல்ல வென்று நான் எவ்வளவோகூறியும் அவர் நம்பவில்லை. நான் அவ்விடத்தை விட்டுச் செல்லாவிடின், உயிரையே விட்டு விடுவதாய் அவர் கூறவே, "விதியின் பயனே பயன்" என்று கருதி நான் இராமரைத் தேடிச் சென்றேன். பின்னர் நாங்கள் இருவரும் திரும்பி வந்து பார்க்கையில் சாலையில் சீதையைக் காணவில்லை. இது என்ன மாயமோ தெரியவில்லை. யாங்கள் பலவாறு துக்கித்துக் கொண்டே வருகையில் சபரி என்னும் மாது ஒருத்தியால் உங்கள் தலைவன் சுக்கிரீவனைப் பற்றிக் கேள்வியுற்று, அவரது குறைகளை நீக்கி எங்களது குறையையும் தீர்த்துக் கொள்ளக் கருதி இங்கு வந்துள்ளோம்" என்றான்.

உடனே அநுமன் ஸ்ரீராம லக்ஷ்மணரிடம் சுக்கிரீவனை யழைத்து வருவதாய்ச் சொல்லி, வணங்கி

விடை பெற்று தன் தலைவனும் இதர வானர வீரரும் பதுங்கியிருந்த இடத்திற்குச் சென்றான்.

சுக்கிரீவன், மாருதி மலர்ந்த முகத்துடன் வருவதைக் கண்டு மகிழ்ந்தான். உடனே யவன், அநுமானைப் பார்த்து, "நண்ப! யாது விசேஷம்? அவர்கள் யார்?" எனலும் அநுமன் சொல்லலுற்றான்.

"தலைவரே! வந்தவர்கள் தசரத சக்கிரவர்த்தியின் புதல்வர்கள். சபரி என்னும் வேடஸ்திரீ மூலம் தங்களைப் பற்றிக் கேள்வியுற்று வந்திருக்கிறார்கள். அவர்களில் மூத்தவராய இராமரின் மனைவியாகிய சீதையை யாரோ ஒரு அரக்கன் கவர்ந்து சென்று விட்டதாயும் தங்களது உதவியைக் கொண்டு அவ்வம் மணியை மீட்க விரும்புவதாயும் மொழிந்தனர்.

அண்ணலே! அவர்கள் மஹா விஷ்ணுவினம்சமாய் விளங்குகின்றனர்; தர்ம ஸ்வரூபிகள்; இதை நான் கண்ணாரக் கண்டேன்.

"காயெரி கனலுங் கற்கள் கள்ளுடை மலர்களே போல்
தூயசெங் கமலபாதம் தோய்தொறும் குழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறும் மரனொடு புல்லும் எல்லாம்
சாய்வுறும் தொழுவபோலிங் கிவர்களே தருமமாவார்",

"மயில்முதற் பறவை யெல்லாம் மணிநிறத்திவர்கள் மேனி
வெயிலுளற் கிரங்கி மீதாஇருஞ் சிறைப்பந்தர் வீசி
எயில் வகுத்தெய்துகின்ற இனமுகிற் கணங் களெங்கும்
பயில்வுறத்திவலைசிந்தும் பயப்பயத்தழுவும் பாங்கர்"—கம்பர்

அண்டினேரை ஆதரிக்கும் தண்மையுடையார் என்பதை அவர்களது முகங்களே அறிவிக்கின்றது.

பிரபுவே! அப்பேர்ப்பட்ட மங்களகரமான அவ்விராம லக்குமணர்களைச் சரணமடைவீராயின் உமது குறை நீங்கும் என்பதில் யாதும் தடையில்லை. தாங்கள் அவர்களோடு சிநேகம் செய்து கொள்ளவேண்டும். அவர்களே வாலியைக் கொன்று வீழ்த்தும் வலிமையுடையவர்கள். கூடிய சீக்கிரத்தில் வாலி உயிரிழப்பதும் தேவரீர் அரசராவதும் திண்ணம். இப்பொழுது அவ்விராம லக்ஷ்மணர் தங்களைப்பார்க்க வேண்டும் என்ற விருப்பத்துடன் இருக்கிறார்கள். சாக்ஷாத் மகாவிஷ்ணுவின் அவதாரமாய் விளங்கும் அவர்களைப் பார்த்தாலே, நம்மைப்பற்றிய துன்பங்கள் யாவும் நீங்கும் "நல்லோரைக் காண்பதுவும் நன்றே" யல்லவா? எனவே, தயவு செய்து சிறிதும் காலம் தாழ்த்தாது என்னுடன் வருக" என்றான்.

மாருதி கூறியவற்றைக் கேட்ட சுக்கிரீவனும் இராம இலக்குமணரை அங்குக் கொணர்ந்து சேர்த்ததற்காக ஈசனைத் துதித்துக்கொண்டே, மாருதியுடன் *மறம் தீய்த்து அறம் வளர்த்தற்கென்று அவதாரம் செய்தருளிய இராமலக்ஷ்மணர் இருந்த இடத்தை யடைந்தான்.

சுக்கிரீவனும் இராம லக்ஷ்மணர்களும் முறையே வந்தனம் செய்துகொண்டு ஒருவருக்கொருவர் அவரவர்

* அதர்மம்

வரலாறுகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் சுக்கிரீவன் விருப்பப்படியே * இருவரும் அக்கினி சாக்ஷியால் நேசம் செய்து கொண்டு, ஒருவருக்குற்ற இன்ப துன்பங்கள் இருவருக்கும் உற்றனவேயாம் என்றும், அவற்றை நீக்க இருவரும் சேர்ந்து உழைக்கவேண்டும் என்றும் உறுதி செய்துகொண்டனர். அது முதல் இராம சுக்கிரீவர் உற்ற நண்பராயினர். நிற்க

ஓர் நாள், இராமபிரான் தாம் அவசியம் வாலியைக் கொல்லுவதாகவும், அவ்வாறு அவனைக்கொல்லுவதற்குத் தமது பாணம் ஒன்றே போதும் என்றும் சொல்ல சுக்கிரீவன் அவரை நோக்கி, "தங்கள்பாணம் அப்பேர்ப்பட்டதென்பதை நான் எவ்வாறு நம்புவது" என்று கேட்டான் உடனே, இராமர் அவனைப்பார்த்து "நண்ப! எத்தொழிலைச் செய்தால் நான் வாலியைக் கொல்லத் தக்கவன் என்பதை நீ நம்புவாயோ, அத்தொழிலைச் சொல் இப்பொழுதே செய்து முடிக்கின்றேன் என்றனர்

உடனே சுக்கிரீவன் இராமரை நோக்கி, இதோ வரிசையாய் நிற்கும் எழு மராமரங்களுள் ஏதேனும் ஒன்றைத் தமது வாளி துளைத்துச் செல்லுமேயானல் அஃது அத்தன்மையது என்பதை நம்புவேன்' என்று கூறினர்.

பின் ஸ்ரீராமர் தமது பாணம் ஒன்றையெடுத்து மராமரத்தை நோக்கி விடவே அது, ஒன்றேயன்றி

---

* இராமரும் சுக்கிரீவனும்.

எழு மரங்களேயும் துளேத்துச் சென்றதல்லாமல், எழு உலகங்களேயும் ஊடுருவிச் சென்று மீண்டு வந்து ஸ்ரீராமர் கரத்தில் அமர்ந்தது. இதைக்கண்ட சுக்கிரீவன் இராம பாணத்தின் மஹிமையையும் இராமரது வலிமையையும் பெரிதும் வியந்தான்.

177787
78
O31,6
N26

அத்தியாயம் 6.

சின்னுட் கழிந்தபின், ஓர் நாள் சுக்கிரீவன் ஸ்ரீராமரைப் பார்த்து, ஸ்வாமி! இவ்வாருக நாட்கள் வீணிற் கழிகின்றனவே. வாலியைக் கொன்று நம் காரியத்தை ஜயிப்பது எப்பொழுதோ? என்று வினவ ஸ்ரீராமர் ஏ வானர சிரேஷ்ட! நாளேயதினம் நீ இம் மலேயின் கீழிறங்கிச் சென்று வாலியை யுத்தத்திற் கழை. நீங்கள் இருவரும் யுத்தம் செய்துகொண் டிருக்கையில் நான் அம்பு தூக்கின்றேன். உடனே வாலி இறந்து விடுவான். நீ இதைப்பற்றிச் சிறிதும் யோசிக்கவேண்டாமென்று திருவாய் மலர்ந்தருளினுர்.

சுக்கிரீவன் அவ்வாறே செய்ய ஒப்புக்கொண்டு மறுநாட் காலே மலேயின் கீழிரங்கி வந்து கர்ச்சித்து வாலியைப் போருக் கழைத்தான். இவனது கர்ஜனே வாலியின் செவிகளில் விழவே, அவன் மிகவும் கோபங் கொண்டு சுக்கிரீவனிருக்கு மிடத்திற்கு வந்தான்.

இருவரும் யுத்தம் செய்ய ஆரம்பித்தனர். நெடுநேரம் போர் நடந்தது.

இவ்வாறு சமர் நடந்துகொண் டிருக்கையில் ஸ்ரீராமபிரான் அருகில் மறைந்திருந்தா ரென்றாலும் தாம் சுக்ரீவனிடம் கூறியபடி அம்பு துரந்திலர். சுக்கிரீவனோ தன்னிடம் கூறியபடி இராமர் நடக்கவில்லை யாதலால் அவர்மீது சந்தேகங்கொண்டு எங்கே ஆபத்து விளைந்து விடுமோ என்ற பயத்தால் போர் செய்வதை நிறுத்திவிட்டு மிகவிரைவாய் மதங்க வனத்தை நோக்கி ஓடினன். வாலியும் வெற்றியுடன் திரும்பினன். இராமரும் சிறிதுநேரத்திற் கெல்லாம் மதங்கராச்ரமத்தை யடைந்தார்.

இராமர் சுக்கிரீவனருகிற் செல்லவே அவன் அவரை நோக்கி ஸ்வாமி! தேவரீரை கதியென்றடைந்த என்னை இவ்வாறு தாங்களேமாற்றலாமா? வாலியைக் கொல்ல வியலாதென்பதைத் தாங்கள் அப்பொழுதே கூறியிருந்தால் நான் என் தமையனுடன் போர் செய்யச் சென்றிரேனே. நண்பர்களை வஞ்சித்தலும் தங்களைப் போன்ற தர்ம ஸ்வரூபிகளுக்கு ஏற்குமா? என்று கூறவே ஸ்ரீராமபிரான் அவன் மீது இரக்கங் கொண்டு, என தனயிற்குரிய நண்ப! நீ இப்பொழுது என்மீது கொண்டிருக்கும் எண்ணம் தவறு. நீ கூறியவாறு நான் ஓர்காலும் வஞ்சிக்கவே யில்லை. ஆனால் ஏன் அம்பு துரக்கவில்லை யென வினவின், அதறகுச் சரியான காரண மொன்றிருக்கிறது சொல்லுகிறேன்.

நீயும் உன் தமையனும் ஒரே ரூபமுடையவர்களா யிருந்தீர்கள். ஆகவே உங்களை இன்னாரென்று பிரித் தறிவது இயலவில்லை. நான் அம்பு தூரந்திருந்தால் ஓர் வேளை அது உன்னைக் கொன்றிருந்தாலு மிருக்கும். அப்பொழுது என் முயற்சிகளெல்லாம் வீணாகு மல்ல வா? நண்பனைக் கொன்றவனாவேனல்லவா? அப்பாவத் திற் கிலக்காகாவண்ணமே நான் வாளா விருந்தேன் என்று கூறினார். உடனே சுக்கிரீவன் இராமரது பாதங்களில் விழுந்து தான் உண்மையை யறியாது கூறியவற்றை மன்னிக்குமாறு வணக்கமாய்க் கேட் டுக் கொண்டான்.

அத்தியாயம் 7.

மறுநாள் இராமர் சுக்கிரீவனை நோக்கி, அன்ப! நேற்றுப் போலவே இன்றும் கீழே சென்று வாலி யைப் போருக்கழை. ஆனால் அவனுடன் போர்செய் யும் பொழுது மாத்திரம் உன்னை நான் அறிந்து கொள்ளும் வண்ணம் இதோ தெரியும் பூமாலை ஒன்றை யணிந்துக்கொள் என்று கூறவே, சுக்கிரீவ னும் அகமிக மகிழ்ந்து அப் பூமாலை யொன்றணிந்து கீழே சென்று கர்ஜித்து வாலியைப் போருக் கழைத் தான்.

இவன் கர்ஜிக்கும் பொழுது வாலி தன் மனைவி யின் அந்தப்புரத் திருந்தான். உடனே மறுபடியும் சுக்கிரீவன் சண்டைக்கு வந்திருப்பதாகவும் இம் முறை அவனை அவசியம் கொன்று விடுவதாகவும் தன் மனைவியினிடம் கூறிப் போருக்குப் புறப்பட் டான்.

வாலியின் மனைவியின்பெயர் தாரை. இவள் மகா கற்புடையவள். தன்னுயகனில் தெய்வம் தவம் பிறி தில்லை யென்றெண்ணும் தன்மையள். நம்நாட்டில் கற் பினுல் மேம்பாடடைந்த பல பெண்களுளவளும் ஒருத்தி. இவள் தன் னிளங்குமாரன் அங்கதன் மூல மாய் இராம லக்ஷ்மணர்களது வரவையும் சுக்கிரீவ னுக்கு அவர்கள் உதவிபுரிவதாகக் கூறிய வார்த்தை யையும், அதைக்கொண்டே சுக்கிரீவன் போருக்கு வந்ததையும் அறிந்தவள்.

ஆகையின் தன்னுயகன் போருக் கெழுவதைப் பார்த்து அவனைத் தடுத்துப் பிராணநாயக! தாங்கள் இப்பொழுது சுக்கிரீவனுடன் போர்செய்யச் செல்வது ஏற்றதன்று. இவன் இப்பொழுது முன்போல் சண் டைக்கு வந்திருக்கிறுனென் றெண்ணுதீர்கள். தங்களி லும் மேம்பட்ட வலியுடைய இருவரைத் துணையாகக் கொண்டு தங்களை வெல்லவந்திருக்கிறன். இது சின் ளுட்கு முன் தோற்றேடிய அவன் திரும்பவும் போர் செய்ய வந்ததிலிருந்து தமக்கு விளங்கவில்லையா என் ருள். உடனே வாலி அவளை நோக்கி "பெண்ணறி வென்பது பெரும் பேதமைத் தென்பதை உன்

னிடமே மெய்யாகக் கண்டேன். கேவலம் சுக்கிரீவனுடன் சண்டை செய்யச் செல்வது ஏற்றதன்றென்றும், என்னினும் மேம்பட்ட வலியுடையாரை அவன் துணையாகக் கொண்டிருக்கின்றா னென்றும் கூறினை. ஆகாய மத்ய பாதாள மென்னும் இம் மூவுலகத்தினினும் என்னினும் மேம்பட்ட வலியுடையவர் இலரே" என்று கூறியதைக் கேட்ட தாரை வாலியை நோக்கி "நாயக! தாங்கள் அவ்வாறு எண்ண வேண்டாம். இராக்ஷஸ 'சம்ஹாரம் செய்து உலகத்தை இரக்ஷிப்பதற்காகவே, மஹாவிஷ்ணு அயோத்தி வேந்தர் தசரதரது குமாரராக அவதாரம் செய்திருக்கிறார். அவரும் அவரது தம்பி லக்ஷமணரும், இப்பொழுது சுக்கிரீவனுக்குத் துணையா யிருக்கின்றனர். தேவரீரே யன்றி மூவுலகும் சேர்ந்துவரினும் ஸ்ரீ ராமபிரானது பாணத்தின் முன்னிற்றல் அரிது. மேலும் "உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்" என்பதையும் "உடன் பிறப்பாற் றோள்வலி போம்" என்பதையும் தாங்கள் அறிவீர்களே அவ்வாறிருக்க தமது உத்தம சகோதரராகிய சுக்கிரீவர் மீது தாங்கள் வீண்பகை கொண்டது தங்களுக்கு கடைசிவரை, துன்பத்தையே கொடுக்கும். அவர் அரசு செலுத்தியது தங்களுக்காகவே யன்றி வேறன்று. ஆகவே அவர்மீது தாங்கள் கொண்ட வீண் கோபத்தைத் தணித்து, அவரை ஆதரியுங்கள். ஸ்ரீராம லக்ஷ்மணர்களை தமது நண்பர்களாகவே கொள்ளுங்கள். ஒருவருக்கு கிடைக்கும் பாக்கியங்களிலெல்லாம் உத்தம

ருடன் செய்யும் நட்பே சிறந்த தென்பது தங்கட்குத் தெரியுமே எனவே, சுக்கிரீவனுடனும், பரமாத்மாக்க ளாகிய ஸ்ரீராம இலக்குமணரிடமும் நட்புக் கொள் ளுங்கள்" என்று கூறி இன்னும் பல நீதிகளையும் எடுத்துரைத்தாள்.

விதி வலியால் இவையாவும் வாலியின் காதில் உண்மை யெனப் படவில்லை. பேதமையால் அவள் கூறுவதாகவே நினைத்து, "பெண்ணறிவால் நீ கூறி யன யாவும் போதும், என்ன செய்ய வேண்டு மென் பதையானறிவேன்" என்று இன்னும் பல சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

தாரையும் தன்னால் கூடியவரை சொல்லிப்பார்த் தும் தடுக்கமுடியாமையால், விதியைவெல்ல எவராலும் முடியாதென்றெண்ணி வாளாவிருந்தாள்.

அத்தியாயம் 8.

வாலி சுக்கிரீவன் இருந்த விடத்தை யடைந் தான். உடனே யவன் தம்பியை "அடா! துஷ்டப் பதரே! பல முறை என்னுடன் போர் செய்ய வந்து தோற்றோடியும் இன்னும் உன் கர்வம் அடங்கவில்லை. எவ்வாறாயினும் இம்முறை, யான் உன்னைக் கொல்லா மல் விடுவேனோ? இதை உறுதியாய் நம்பு" என்று

கூறினன். இருவரும் இவ்வாறு வீரமொழிகள் பற் பல விளம்பிக்கொண்டு, ஒருவரோ டொருவர் போர் செய்ய ஆரம்பித்தனர். இரண்டு ஒரே வடிவமுள்ள மலைகள் தமக்குட் பொருவதுபோல் இருவரும் போர் செய்தனர்.

வாலி அன்று மிகுந்த கோபா வேசம் கொண்டு போர் செய்தானுகையின், சுக்கிரீவன் அவனை யெதிர்த்து நெடுநேரம் போர் செய்யமாட்டாமல் வெகு விரைவிலேயே தளர்ச்சி யடைந்தான். மறைந்து நின்ற இராமரோ, "இன்னும் சற்று தாமதித்தால் சுக்கிரீவன் உயிருக்கே அபாயம் நேரும்" என்பதை யறிந்து, உடனே தம் அம்புகளில் ஒன்றை வில்லி லேற்றி வாலியின் மீது ஏவிவிட்டார். அவ்வாறு ஸ்ரீராமரால் ஏவப்பெற்ற பாணம் மிக விரைவாய்ச் சென்று, வேறு எப்பாணமும் நுழையமாட்டாத வாலியின் மார்பில் தைத்தது.

ஸ்ரீராம பாணம் தன்மார்பிற் பட்டதும் வாலிக்குத் தன் மனைவி கூறிய மொழிகள் யாவும் உண்மை யென்பது விளங்கிற்று. உடனே அப்பாணத்தின் வேகத்தைத் தாங்கமாட்டாதவனுய் வாலி பூமியிற் சாய்ந்தான். அப்பொழுது அவனது நிலைமை மிகப் பரிதாபப்படத் தகுந்ததாயிருந்தது. ஆனால் வாலி மஹா வீரனுகையின் மனத்தளர்ச்சி யடையாமல் தன்னையும் வீழ்த்திய அப்பாணத்தை எய்தவன் இன்னுனென அறியவேண்டி, தன் மார்பில் பலமாய்த் தைத்திருந்த அப்பாணத்தைத் தன் கைகளாலும் கால்களா

ய்

னும் மிக விரைவாய்ப் பிடுங்கினுன். பிடுங்கி அதை யுற்று நோக்கிய வளவில்,

" 1மும்மைசால் உலகுக்கெல்லாம்
மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே 2தமர்க்கு நல்கும்
3தனிப்பெரும் பதத்தைத்தானே
இம்மையே 4எழுமைநோய்க்கும்
மருந்தினை இராம என்னும்
5செம்மை சேர் நாமம் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்"—கம்பர்.

ஸ்ரீராம பிரானது நாமத்தை அவ்வாளியின் இடத்தே கண்ட வாலி மிகவும் கோபமடைந்து, அநேக காலமாக தருமத்தினின்றும் வழுவாத சூரிய குலமும் இவ்விராமன் என்பவனுல் தன்னியல்பு மாறு பட்டது என்று ஸ்ரீராமரைப் பலவாறு தூஷித்துக் கொண்டிருந்தான்.

வாலி அடியற்றமரம் போல் கீழேவிழுந்து கிடப் பதையும் அவன் மார்பினின்று இரத்தம் வெள்ளம் போற் பாய்வதையும் கண்ணுற்று, அவன்மீது இரக்

1. மூன்றகிய ஆகாய மத்யபாதலம் என்னும் மூன்று.
2. தம்மைத் தொழும் அடியவர்
3. ஒப்பற்றபரமபதம்.
4. ஏழெழுஜன்மம்.
5. ஒரு பொருள்: இரத்தம் பட்டுச் சிவப்பு நிறத்தால் (ஓலையில் கரிதடவியது போன்று) தெளிந்து நின்ற; மற் ரொரு பொருள்; செப்புவோர்க்குச் செம்மை யளிக்கும்

கம் கொண்டவராய்த் தம் தம்பியுடன் இராமர் அவன் விழுந்து கிடந்த இடத்தை நோக்கி வந்தார்.

இராமரும் இலக்குமணரும் தன்னை நோக்கி, வரக்கண்ட வாலி அவர்களை நோக்கி, சில போக மொழிகள் கூறுவோனாயினான். "சத்தியத்தையும் தன்குல தர்மத்தையும் காப்பதற்கென்ற உயிரையும் நீத்த தசரதராது குமாரனாகிய ஸ்ரீராமா! நீ பிறந்ததால் உன்னுடைய குலப்பெருமை முழுவதும் அழிந்தது. நீ உன் தந்தை மொழியைத் தாங்கி, காட்டிற்கு வந்தது. இத்தகைய கொடும் பழியை உன் குலத்திற்கு அளிக்கவா?

மகன் தந்தைக் காற்று முதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும்சொல் —திருக்குறள்.

அதாவது ஓர் புத்திரன் தந்தைக்குச் செய்யும் உதவி "இவனைப்பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ?" என்று உலகத்தார் புகழ்ந்து கூறும் மொழியேயன்றோ? அவ்விதம் இருக்க "இவன் தந்தை ஏன் இவனைப் பெற்றான்" என்னும் வசைச் சொல்லையன்றோ உன் தந்தைக்குத்தேடி வைத்தனை.

ஏ! இராம! "நின்,

குலமிது; கல்வியீது; கொற்றம் ஈது; உற்றுநின்ற
நலமீது; புவனமூன்றும் நாயகம் உன்னதன்றோ?
வலமிது; இவ்வுலகம்தாங்கும் வன்மையீது
[என்றால் திண்மை
அலமரச் செய்யலாமோ? அறிந்திருந்தயர்ந்துளார் போல்
—கம்பர்.

இராஜதர்மம் உங்கள் வம்ஸத்தில் சிறந்து விளங்கியதே. அவ்விதம் இருக்க, நீ மட்டும் அதினின்றும் பிழைத்தனே? ஓர் வேளை உன் உயிர் போன்ற சீதா தேவியையிழந்த துக்கத்தால், செய்யத்தக்கது இது; தகாதது இது என்று அறியாமல் இஃது இழைத்தனையோ? இல்லையாயின் இராக்கதர் ஓர் அழிவு செய்து சென்றால் அதற்காக சம்பந்தமில்லாத ஓர் குரக்கினத் தலைவனைக் கொல்லும்படி உன் மநுதர்ம சாஸ்திரம்தான் புகன்றதோ?

அரச வமிஸத்திற் பிறந்தார்க்கு அணிகலமாய கருணையை எங்கு உதிர்த்துவிட்டாய். உலகத்திற் கெல்லாம் முதல்வனாகிய நீயே இத்தகைய பழியைப் பூண்பாயேயாயின், இனி யார்தான் புகழைப் போற்றப் போகிறார்கள்?

ஏ! எல்லாம் அறிந்த ஸ்ரீராம!

ஒலிகடல் உலகந்தன்னில் ஊர்தருகுரங்கின் மாடே
கலியது காலம்வந்து பரந்ததோ? கருணைவள்ளால்
மெலியவர் பாலதேயோ? ஒழுக்கமும் விழுப்பந்தானும்
வலியவர் மெலிவுசெய்தால் புகழன்றி வசையு
முண்டோ?

—கம்பர்.

ஒழுக்கமென்பது எளியார்மாட்டுத்தான் போலும். வலியவர்கள் குற்றம் செய்யின் அக்குற்றமும் புகழைத் தருமேயன்றி துன்பம் தராது என்னும் பெரியார் மொழி உண்மையே.

நீ இப்பொழுது செய்த இழி தொழிலால் வாலியை மட்டும் கொன்றுவிட்டதாக எண்ணவேண்டாம். இராஜதர்மம் என்று சொல்லும் வேலியையே யன்றோ அழித்துவிட்டனை. நிற்க,

“செயலைச்செற்ற பகைதெறுவான் தெரிந்(து)
அயலைப் பற்றித் துணையமைந்தாயெனின்
புயலைப் பற்றுமப் பொங்கரிபோக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியே.”

—கம்பர்

இராவணனைக்கொன்று சீதையை மீட்கும் சுய நலங் கருதி இவ்விழி தொழிலைச் செய்திருக்கலாம் என்றாலும் இராவணன் என்னும் மதயானையின் மத்தகத்தைப் பிளக்க அரிமாயானன்றோ! சுக்கிரீவன் அவ்வரிய தொழிலைச் செய்யவல்லனல்லன். ஆகவே வலிய ஆண்யானையைக் கொல்வதற்கு அதைக் கொன்று வீழ்த்தும் சிங்கத்தைவிட்டு, ஓர் முயலை உதவிக்கொண்டது போலாகும்.

“ கார் இயன்ற களங்க நிறத்தொன்மை
ஊர் இயன்ற மதிக்குளதாம் என
சூரியன் மரபுக்கு மோர்தொன்மறு
ஆரியன் பிறந்(து) ஆக்கினையாம் அரோ?”

—கம்பர்

இதுகாறும் இருசுடர்களில் சந்திரனுக்கே மறு உண்டென்று உலகத்தார் சொல்லிவந்தார்கள். நீ

பிறந்ததனுல் சூரியனுக்கும் ஓர் மறு ஏற்படுத்தினை என்று பலவாருக தனது பற்கள் தூள்படவும் கண்களிலிருந்து நெருப்புப் பொறிபறக்கவும் வாலி தன்னைப் பழித்துக் கூறுவதைக்கேட்ட இராமர் அவனைப் பார்த்து, ஏ வாலி! உன்னை யநியாயமாக நான் கொல்லவில்லை. நீ செய்யத் தகாத பல காரியங்கள் செய்தமையாற்ருன் உன்னைக்கொன்றேன். துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனத்திற்காகவே நானிவ்வுலகத்திற் பிறந்தவன். நீ குகையிற் சென்றவன் நெடுநாளாகத் திரும்பாமைபற்றி உன்குல முதியார் பலரும் நீ இறந்துவிட்டதாக எண்ணி சுக்கிரீவனை அரசேற்குமாறு வேண்டிக்கொண்டனர். அதற்கு குற்றமற்றவனுகிய சுக்கிரீவன் பல வகைகளால் மறுத்துப்பார்த்தான். ஆனுல் கடைசியில் எல்லாரும் வேண்டிக்கொள்ள அரசேற்க ஒருவாறு ஒப்புக்கொண்டான். நீ மாயாவியை வென்று திரும்பி வந்ததும் யாதொரு தடையும் கூருமல், மிக மனமகிழ்ச்சியுடன், "எந்தையே என் இனத்தவர் ஆற்றலிற்றந்த நின் அரசு இதோ" என்று கூறி நின்னிடம் ஒப்பித்து உன் ஏவலில் நின்ருன்.

அவன் கூறியதை நம்பாது, நீ,

"கொல்லல் உற்றனை உம்பியை; கோ(து)அவற்(கு)
இல்லையென்ப(து) உணர்ந்தும் இரங்கலை
அல்லல் செய்யேல் உனக்கு அபயம் பிழை
புல்லல் என்னவும் புல்லலை பொங்கினுய்."

வலிமை மிக்குடையவனாகிய சுக்கிரீவன் தன்னுடைய ஆற்றலையும் எண்ணாது "அண்ணா! அண்ணா! உன்னுடன் போர்செய்யயான் எம்மட்டு? நான் செய்தபிழைகளை மன்னித்து என்னைக் காக்கவேண்டும்" என்று உன் பாதத்தில் விழுந்து வணங்கியும் நீ சிறிதும் இரக்கமற்றவனாய் பின்னவன் இவன் என்பதையும் பேணாது அவனைக் கொல்லத் துணிந்தனை. எவ்வளவோ வேண்டிக்கொண்டும் நீ சிறிதும் இரங்காமையால் சாபத்தால் நீ யணுகமுடியாத மதங்கவனத்தை யடைந்தான். ஆகையினால் நீ அவனைக் கொல்லமுடியாதவனாய்த் திரும்பினை. மேலும்,

"ஈரம் ஆவதும் இற்பிறப்(பு) ஆவதும்
வீரம் ஆவதும் கல்வியின் மெய்நெறி
வாரம் ஆவதும் மற்றொருவன் கொளும்
தாரம் ஆவதைத் தாங்கும் தருக்(கு) அரோ"

தருமம் இன்னது எனும் தன்மையும் செய்யத்தக்கவை தகாதவை ஆகிய இரண்டும் தெரிந்தும் அவற்றைச் சிறிதும் கவனியாதவனாய் உனது அருமைத் தம்பியாகிய சுக்கிரீவனது மனைவியின் கற்பையழித்தனை. இத்தகைய பெருங்குற்றங்களை நீசெய்தமையாலும் சுக்கிரீவன் எனது ஆருயிர்க்காதலன் ஆகையினாலும் உன்னைக் கொன்றேன். கதியற்றவர்களுக்கு நேர்ந்த துயர்களை நீக்கிக் காக்கவேண்டும் என்பதே எனது சிந்தைக் கருத்து" என்று ஸ்ரீராமபிரான் கூறினார்.

இவ்வாறு ஸ்ரீராமபிரான் கூறி முடிந்தவுடன் வாலி அவரை நோக்கி "பெருந்தகையே! உங்கள் குலத்திற் பிறந்த பெண்களுக்குள்ளது போல,

மணமுமில்லை மறை நெறிவந்தன
குணமும் இல்லை குலமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
நிணமு நெய்யு மிணங்கிய நேமியாய்" —கம்பர்.

இதுவே எங்களது தன்மை. வழக்கத்திற்கு விரோதமாய் யான் ஒன்றும் செய்திலேன். அவ்விதம் இருக்க என்னிடம் நீர் குற்றம் கண்டது எவ்வண்ணம்? என்று வாலி வினவ ஸ்ரீராமபிரான் அவனைநோக்கி "நீ உருவத்தில் விலங்காக இருந்தபோதிலும், உயர்ந்த தேவருக்குத் தோன்றியமையின் நீயும் தேவனே. மேலும் வேதம் முதலிய பல அறநூற்களிலும் நன்கு பயின்றுள்ளாய். ஆகையின் இத்தொழில் உனக்கு அடுத்ததன்று. உன்னைப் போன்று விலங்கு வடிவத்துடன் இருந்தும் நற்செய்கைகளால் மோக்ஷ சாதனமடைந்த சிலரைப் பற்றிக் கூறுகிறேன் கேள்:—

தன் காலைப்பற்றி முதலையானது இழுத்த காலத்து "நாராயணா ஓ! மணிவண்ணா! நாகணையாய்! வாராய் என் ஆர் இடரை நீக்காய்" என்று கதறி அவனருளால் வீடுபெற்ற கஜேந்திராழ்வானும் ஓர் யானையே அன்றோ? தர்ம மார்க்கத்திலேயே தன் சிந்தனையைச் செலுத்தி ராவணன் எடுத்துச் சென்ற என் மனைவியைக் காப்பாற்ற வென்றே அவனுடன்

போர் செய்து வீடுபெற்ற என் சிறிய தகப்பனுரான ஜடாவும் கழுகுகளுக்கரசனே யன்ருே?

நன்மைதீமை தெரியும் நல்லறிவின்றி வாழ்வதல்லவா விலங்குகளின் தன்மை. நீ யறியாத தர்மம் உலகத்தில் ஒன்றுமில்லை யென்பது நீ இதுவரை என்னுடன் பேசிய வார்த்தைகளினின்றும் நன்குபுலப்படும்.

"தக்க இன்ன தகாதன இன்னவென்
ருெக் கவுன்னல ராயினுயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின்னெறி
புக்கவேலவ்விலங்கும் புத்தேளிரே"—கம்பர்.

செய்யத்தக்கது தகாதது இது என்று பகுத்தறியும் திறமை யில்லாத மனிதர்களும் விலங்கேயாவர். அத்திறமையுடைய விலங்கும் தேவனுகவே கருதப் படும். ஏ! வாலி! பலகலைகளும் ஓதி, பலவரங்கள் பெற்றிருக்கும் உன்னை எவரும் விலங்கென்று சொல்லமாட்டார்கள் தெரிந்தும் தெரியாதது போல் உன் தம்பி மனைவியின் கற்பையழித்தனை யாதலால் உன்னை யான் கொன்றது தக்கதே. என்ருர்.

ஸ்ரீராமன் கூறிய மொழிகள் யாவற்றையும் மிக்க கவனத்தோடு கேட்டுவந்த வாலி மறுபடியும் இராமரைப்பார்த்து "ஏ! இராமா, நீ சொல்வன யாவும் சரியே. ஆயினும் மறைந்து நின்று விலங்குகளை அம்பெய்து கொல்லும் வேடுவரைப்போல் ஒளித்து நின்று என்னுயிரைக் கவர்ந்த காரணம் என் என

அறியக் கூறுவாயாகில் என்மனம் சமாதானம் அடையும்!" என்று கூறினர்.

உடனே இலக்மணன் அவனை நோக்கி

"முன்புநின் தம்பிவந்து சரண்புக; முறையிலோயைத்
தென்புலத் துய்ப்பனென்று செப்பினன் செருவில்நீயும்
அன்பினை உயிருக்காகி அடைக்கலம் யானுமென்றி
என்பது கருதி யண்ணன் மறைந்து நின்றெய்ததென்றான்."

அடா! வாலி! முன் உன் தம்பி சுக்கிரீவன் உன் தீச் செய்கைகள் யாவற்றையுங் கூறிச் சரண்புகுந்த காலத்தில், மகாபாதகனுகிய உன்னை எப்படியேனும் கொன்றுவிடுவதாய் என் அண்ணன் வாக்களித்தார். எதிரில் உன்னேடு போர்செய்தால் இராமபாணத்தின் முன் நிற்கமாட்டாத நீ உயிர் பிழைத்தாலே போதும் என்றெண்ணிச் சரண்புகுந்தால், சொன்ன சொல் தவற நேரிடும், தர்மமும் அழியும் என்று கருதியே என் அண்ணன் உன்மீது மறைந்திருந்து அம்பு எய்தாரேயன்றி வேறில்லை என்று சமாதானம் கூறினன்.

இவற்றைக் கேட்டதும், இராமர் தன்னைக் கொன்றது நீதியே என்று வாலி மனத்திற் பட்டது. அப்பொழுது அவனுக்குப் பூர்வஞானம் வர ஸ்ரீராமனைத் துதிக்க ஆரம்பித்தான்.

"தாயென உயிரையளித்து, தர்மஸ்வரூபியாய் நிற்கின்ற வுருவே! அற்பக் குரங்காகிய யான் உன்னை அறியாமல் இகழ்ந்து கூறிய மொழிகளை மனங்கொள்ளலாகாது. மன்னிக்கவேண்டும். நீங்காத பிறவிநோ

யை யறுக்கு மமிர்தம் போன்ற இராமா! உனது உயர்ந்த பாணம் பாய்ந்ததால் உயிரை விடப்போகின்ற எனக்கு சாகுந்தருணத்தில் பூர்வஞானம் தந்தருளினை. மூவரும் நீயே! முதல்வனும் நீயே! பாவமும் நீயே! தருமமும் நீயே! பகையுநீயே! உறவும் நீயே.

ஆ ஸ்ரீராமா! திரிபுரம் தகித்த சிவபெருமானும் போர் செய்ய அஞ்சும் எனது வரத்தையும், வலிமை மிக்க மார்பையும் உருவிச் சென்ற உன் கோதண்டத் திற் கோக்கப்பெற்ற பாணமேயல்லாது தர்மம் பிறிது முண்டோ!

பூர்வஜன்ம நல்வினைப் பயத்தால் உன்னைக் கண்டு கொண்டேன். இனி எனக்கு இதைக் காட்டிலும் சிறந்ததொன்றில்லை. ஒன்று கேள்! பெருமை தங்கிய ஸ்ரீராமா! கட்குடித் தயர்ந்திருக்கும் காலத்தில் என் தம்பி ஏதேனும் குற்றம் செய்து விட்டான் என்று லும் இப்பொழுது என்மீது ஏவிய பாணம் ஆகிய இயமனை அவன் மீது ஏவிவிடாதே.

மற்றொன்று, என் தம்பியை உனது சுற்றத்தார் கள் அண்ணனைக் கொல்வித்த பாவி என்று சொல் வரேயாயின் உடனே அதைத் தடுக்கவேண்டும் பிரபுவே!

ஒரேஒரு மனக்குறைமாத்திரம் சாகும் பொழுது உடன் கொண்டு செல்கிறேன். உன்னைச் சேவித்துக் கொண்டே உன்னருகிலமரும் பாக்கியத்தையான் பெற வில்லை யென்றாலும், உனது மனைவியைத் தூக்கிச்

சென்ற அந்த அரக்கனை எனது வாலிற் பற்றி உனக்கு முன் கொணர்ந்து விட்டு என் வல்லமையைக் காட்டவும் பெற்றிலேன். என்ன செய்வேன். ஆயினும் அப்பகையினை உனக்கு முடித்துத் தருவான் என்தம்பி என்பதிலையமில்லை தவிர ஸ்ரீராம! இதோ அருகில் இருக்கும் அநுமன் அத்தொழிலைச் செய்ய உரியவனாவான்.

ரகுகுலதிலக! அநுமானை உன் கையிலுள்ள கோதண்டமெனநினைப்பாயாக. என் தம்பியை உன்தம்பியைப்போல் நினை. இவர்களைத் துணையாகக் கொண்டால் அவசியம் உன்காரியம் சித்திபெறும்.” என்று துதித்தான்.

தாருடாவிடினும் தன் தசையாடு மல்லவா? வாலி தரையிற் படுத்துப் புரள்வதையும் அவன் மார்பினின்று இரத்தவெள்ளம் பாய்வதையும் கண்டவுடன், சுக்கிரீவன் மனத்தில் வருத்த முண்டாயிற்று. கண்களினின்று தாரை தாரையாய் நீர் பெருகிற்று. இதைக் கண்ட வாலி தன்தம்பியை அருகிலழைத்து அவனை இரு கரங்களாலும் தழுவிச் சொல்லுவான், “தம்பி! வேதங்களும் வேதியரும் பிரமதேவனும் மற்ற அறநூல்களின் முடிவும் யாவும் ஒன்று சேர்ந்து வீரக்கழலணிந்த இராமனுருவெடுத்து வந்திருப்பதை யுணர்வாயாக.

அழிவில்லாத பரமபதச் செல்வத்தை வேண்டி தர்மமார்க்கத்தி நிற்பவர் யாரும் இவனது நாமமாகிய “ராம” என்னும் இரண்டெழுத்தையே ஓதுவர். இவர்

அறமே யுருவெடுத்துவந்த கடவுள் என்பதற்கு ஓர் பாணத்தால் என்னை மாய்த்ததொன்றே போதிய சான்ருகும்.

தினம்தோறும் கொடுந் தொழில்களையே செய்த பஞ்சமகா பாதகர்களும்கூட இதோ நிற்கும் தர்மஸ்வரூபியினுடைய பாணத்தால் மரிப்பரேல் பரமபதம் அடைவாரெனின், அவரருகிலேயே யிருந்து ஏவல்புரியும் பாக்கியம் பெற்றவர்கள் அடையும் பதம் இன்னதென்று சொல்லவும் வேண்டுமோ?

சிறுவ!

கட்குடித்து மதங் கொண்டலையும் குரங்கின் தன்மையை நீக்கி, இப்பெருமான் உனக்குச் செய்த பேருதவியை என்றும் மறவாது, அவருக்கு வேண்டிய வேண்டிய இடங்களில் உதவிகள் செய்வாயாக. பரமபதத்தை யெவர்க்கும் அளிக்கும் வேத ஸ்வரூபனை இக்கடவுள் பணித்தவற்றைச் சிரமேற்ருங்கி, செய்து முடித்து இறுதியில் சமுத்திரம் போன்ற இப்பிறவியைவிட்டு, பேரின்ப மடைவாயாக.

தம்பி! அரசனுகி விட்டோம் என்று அகம்பாவம் கொண்டு இவர்களை யிகழ்ந்துவிடாதே. அரசர்கள் எரியனலுக்குச் சமானமாவார் என்ற மெய்மொழியை மனதிலேயே வைத்திரு. குற்றம் செய்தாற் பொறுப்பரென்றெண்ணுதே.''

இப்படிப் பலவாறு சுக்கிரீவனுக்கு ஹிதோபதேசம் புரிந்து, பின் வாலி அவனையும் அவனரு

சுற்றத்தாரையும் ஸ்ரீராமரிடம் அடைக்கலமாக ஒப்பு வித்தான்.

பின் தம்பியைப்பார்த்து, சுக்கிரீவா! உன் அருமைப் புதல்வனுன அங்கதனை யழைத்துவா என்று சொல்ல சுக்கிரீவன் ஏவலால் அங்கதன் விரைந்து ஓடிவந்தான்.

மலைபோன்று, இரத்த வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்த தன் தந்தையைக் கண்டதும், அங்கதன்,

"எந்தையே எந்தையே யிவ்வெழுதிரை வளாகத்தியார்க்கும்
சிந்தையாற் செய்கையாலோர் தீவினை செய்திலர்தாய்
நொந்தனை யதுதான் நிற்க நின்முகம் நோக்கிக் கூற்றம்
வந்ததேயன்றோ அஞ்சாதாரதன் வலியைத் தீர்ப்பார்"

என்று பல பன்னிக் கதறினுன்.

அப்படிக்கதறிய தன் மைந்தனை வாலி தன் இரு கரங்களாலும் தழுவி, உச்சிமுகந்து, குழந்தாய்!

"தோன்றலு மிறத்தல்தானும் துகளறத்துணிந்து நோக்கின்
மூன்றுலகத்தியார்க்கும் மூலத்தே முடிந்ததன்றே
யான்தவமுடைமையாலிவ் விறுதி வந்திசைந்ததார்க்கும்
சான்றென நின்றவீரன் தான் வந்துவீடுதந்தான்"

அழாதே; பிறத்தலும் இறத்தலும் சகஜம். நான் பூர்வஜென்மத்தில் செய்த நல்வினைப் பயத்தால் இவ்விராமரது பாணத்தால் வீடுபெறு பாக்யம் பெற்றேன்.

பால! சிறுபிள்ளைத் தன்மையை விட்டுவிடு. தனக்கு மேலொருபொரு ளுமில்லா மெய்ப்பொருள் கோதண்டம் கரத்தேந்தி வந்ததாக இந்த இராமரை யெண்ணு. வருந்தியும் பார்த்தற்கரிய இவ்வுரு வனு விலே வந்து நமக்குக் காக்ஷியளித்தது.

தந்தையைக் கொன்றவன் என்பதாய் ஸ்ரீராமனை நினையாதே, உனக்குறுதி தேடிக்கொள்ள வேண்டுமா யின் தினமும் அவனை வழிபடு. அவனுக்கு ஏவல் புரிந்து வா? அவனது பாதாரவிந்தங்களே உனக்கு நன்மையளிக்கும். கவலைப்படாதே. இவைமுதல் பல புத்திமதிகளையும் தன் புதல்வனுக்குக் கூறியபின் வாலி அங்கதனையும் இராமரிடம் அடைக்கலமாகச் சேர்ப்பித்தான்.

பின், வாலிக்கு தளர்ச்சி யேற்பட்டுவிட்டது. பேசமுடியவில்லை. உடனே அவன் ஸ்ரீராமரை வண ங்கினன் ஸ்ரீராமபிரானும் தமது வாளைநீட்டி "ஏ! வாலி நீ இதுபொறுத்தி" யென்றூர். உடனே வாலி யின் உயிர் உடலை நீத்து மோக்ஷமடைந்தது.

அவனது கரத்தாற் பிடிக்கப்பட்டிருந்த இராம பாணமும், கரத்தினின்றும் நீங்கி, கடலில் குளித்து, உயரச்சென்று தேவர்கள் சூட்டிய பூமாலையுடன், திரும்பிவந்து ஸ்ரீராமபிரானது அம்புக்கூட்டை யடைந்தது.

வாலியினது மரணத்தை யறிந்து அவனது மனைவியாகிய தாரை, அவ்விடத்திற்கு வந்து வாலி

யின் உடலின்மேல் விழுந்து பல பன்னிக்கத ...ள். பின் இராமர் சுக்கிரீவன் அங்கதன் முதலிய பலர் அவளைத் தேற்றினர். சுக்கிரீவனும் அங்கதனும் வாலிக்குச்செய்யவேண்டிய ஈமக்கடன்களை முறையே முடித்தனர்.

பின் கிஷ்கிந்தைக்குச் சென்று ஸ்ரீராமபிரான து வேண்டுகோளின்படி அங்கு சுக்கிரீவன் முடி(சூடி)னன். பின் அனைவரும் சுகமே வாழ்ந்தனர்.

177787

சுபம்! சுபம்!! சுபம்.

ஆரியனருளிற் போயவ்வகன் மலையகத்தனன
சூரியன்மகனு மானத்துணைவரும் கிளையும்சுற்ற
தாரையை வணங்கியன்னாள் தாயெனத் தந்தை( )த
சீரியன் சொல்லே என்னச் செவ்விதினரசுசெய்

OFFICE OF THE REGISTRAR ... 14 AUG 1926 MADRAS

Printed at the Meenakshi Vilas Press, Madu

ffff
1054

எங்களால் பிரசுரிக்கப்பெற்ற பாடசாலைக்குறிய

புத்தகங்கள்.

பிரதமபாடசாலைக்குறிய புத்தகங்கள் (Primary Classe

வித்தியாரத்னாகர தமிழ் முதல் பாடம்	0	2

ஷை 2, 3, 4, 5-ம் பாடங்கள் கூடிய சீக்கிரம் வெளிவரு

2, 3, 4, 5-வது வகுப்புகளுக்கு
உபபாடமாக வைக்கத்தகுந்த புத்தகங்கள்.

* உலகநீதி நீதிக்கதைகள்	0	2
* ஆத்திச்சூடி நீதிக்கதைகள்	0	2
* கொன்றைவேந்தன் நீதிக்கதைகள்	0	2
* வெற்றிவேற்கை நீதிக்கதைகள்	0	3
* பாலர் நன்மதிக்கதைகள்	0	2
* வாலி சரிதை	0	2
* நற்புதல்வர்கள்	0	4
* நற்பெண்டிர்	0	3
* மகாராணி மங்கம்மாள்	0	3

நாகர்கோயில் டிரெயினிங் ஸ்கூல் ஹேட்மாஸ்டர்
T. S. நெல்லையப்ப அய்யர் இயற்றிய
பூகோளங்கள்.

* மதுரை ஜில்லா பூகோளம்	0
* ராமநாதபுரம் ஜில்லா பூகோளம்	0
* திருநெல்வேலி ஜில்லா பூகோளம்	0

சிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கப்பாடங்கள்.

* சிவிக்ஸ் முதற் பாகம்	0
ஷை இரண்டாம்பாகம்	0

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பப்ளிஷர்ஸ், புக்ஸெல்லர்ஸ், மதராஸ் & மது

* இக்குறியுள்ளவை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் ெ